www.tamilarangam.net

விடுதலைப் புலி வேட்டை என்ற பெயரில்
இலங்கை ராணுவத்தின் காட்டுமிராண்டி செயல்:
# அப்பாவி தமிழர்கள் சுட்டுப் பொசுக்கல்!

# தமிழர்கள் படும் சித்ரவதையை நேரில் பார்த்த நிருபர் தகவல்!!

நியூயார்க், மே. 3— "விடுதலைப் புலி வேட்டை என்ற பெயரில் இலங்கை ராணுவத்தினர் காட்டுமிராண்டி செயலில் ஈடுபட்டு உள்ளனர். அப்பாவித் தமிழர்களை சுட்டு பொசுக்குகிறார்கள்" என்று தமிழர்கள் படும் சித்ரவதையை நேரில் பார்த்த அமெரிக்க பத்திரிகை நிருபர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை நிருபர் இலங்கையில் தமிழர் வசிக்கும் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்தார். தமிழர்கள்படும்சித்ரவதையை நேரில் கண்டார். யாழ்ப்பாணத்தில் தமிழர்களை பேட்டி கண்டு அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை கேட்டு அறிந்தார்.

## மாறுபட்ட செய்திகள்

இது தொடர்பாக பத்திரிகையில் அவர் எழுதியிருப்பதாவது:—

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளை ராணுவம் வேட்டையாடுவதாக இலங்கை அரசு அறிவித்து உள்ளது. ஆனால் அங்கு உள்ள மக்கள் சொல்லும் செய்திகள் மாறுபட்டதாக உள்ளது.

இந்த செய்திகளை யார் சொன்னது என்று தெரிந்தால் கொடுமைகளுக்கு ஆளாக நேரிடும் என்று தெரிந்தும் நடுத்தர குடும்பத்தை சேர்ந்த தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் பலர் உண்மையை சொல்ல முன்வந்தனர். ஆனால் அவர்கள் தங்கள் பெயர்களை தெரிவிக்க விரும்பவில்லை. பெயரை தெரிவித்தால் ஒரு நிமிடம்கூட இலங்கையில் இருக்க முடியாது என்று கூறினார்கள்.

## யாழ்ப்பாணத்தை தனிமைப்படுத்தி விட்டனர்

ராணுவத்தினரின் காட்டுமிராட்டித்தனமான செயல்கள் பற்றி இலங்கையின் மற்ற பகுதிகளுக்கோ, உலக மக்களுக்கோ தெரியவில்லை. காரணம் இலங்கையில் பத்திரிகை தணிக்கை அமுலில் உள்ளது. இலங்கையைவிட்டு எந்தச் செய்தியும் வெளிவராதபடி இலங்கை அரசு தடுத்து வருகிறது.

எனவே யாழ்ப்பாணம் தனிமைப் படுத்தப் பட்டு உள்ளது.

## கடைக்கு சென்ற இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம் மக்கள் என்னிடம் தெரிவித்த தகவல்களை இங்கே விவரிக்க விரும்புகிறேன்.

யாழ்ப்பாணத்தில் பகலில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டது. அப்போது ஒரு தமிழ் இளைஞர் அருகில் உள்ள கடைக்கு தேங்காய் வாங்கச் சென்றார். அவர் வீட்டுக்கு திரும்பும்போது ராணுவத்தினர் அவரை தடுத்து நிறுத்தினார்கள். அவரை எங்கே இருக்கிறாய் என்று கேட்டார்கள். அவர் கையில் தேங்காய் இருப்பதையும் பொருட்படுத்தாமல் அவரை சுட்டுக்கொன்றார்கள்.

இதற்கு சற்று நேரம்கழித்து அதே பகுதியில் ஒரு பொற்கொல்லர் சைக்கிளில் வேலைக்குச் சென்றார். ராணுவத்தினரிடம் அவரும் சிக்கினார். ஒரே ஒரு குண்டால் அவர் உயிரைப் பறித்துவிட்டனர். மேலும் 2 பேரும் அங்கு கொல்லப்பட்டனர்.

4 பிணங்களையும் அருகில் உள்ள ரெயில்வே ரோட்டுக்கு இழுத்துச்சென்றார்கள். பெட்ரோல் ஊற்றி தீவைத்துக் கொளுத்தினார்கள்.

தமிழர்கள் சொன்னதை கேட்டு நான் அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று பார்த்தேன். அங்கு பிணங்கள் கொளுத்தப்பட்டிருப்பது தெரியவந்தது. அருகில்உள்ள மரக்கிளைகள் கருகி இருந்தன.

## விமானப்படை வீரர்கள் அட்டூழியம்

யாழ்ப்பாணத்தில் திறந்த வெளி மார்க்கெட் ஒன்று உள்ளது. அங்கு பெண்கள், குழந்தைகள் மற்றும் ஆண்கள் தினமும் சென்று காய்கறிகளை வாங்குவது வழக்கம். அங்கு விமானப் படை வீரர்கள் புகுந்து எந்திர துப்பாக்கிகளால் மனம் போனபடி சுட்டார்கள்.

இதில் வயதான பெண்கள் உள்பட பலர் கொல்லப்பட்டனர்.

விமானப் படையைச் சேர்ந்த 2 வீரர்களை தீவிரவாதிகள் கொன்று விட்டனர். இதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக அப்பாவி மக்களை விமானப் படையினர் கொன்று குவித்தனர்.

## 2008 பேர் பலி

கடந்த (ஏப்ரல்) மாதம் நடந்த ராணுவ அட்டூழியத்தில் 50 பேர் பலியானதாக இலங்கை அரசு அறிவித்து உள்ளது. இது உண்மையான தகவல் அல்ல. 2008 பேர் கொல்லப்பட்டதாக மேல் நாடுகளை சேர்ந்த தூதர்களும் தமிழர்களும் என்னிடம் தெரிவித்தனர்.

எந்தக்குற்றமும் செய்யாத அப்பாவி தமிழர்களை ராணுவம் வேண்டும் என்றே சுட்டுக் கொன்றது என்று யாழ்ப்பாணத்தை சேர்ந்த பலரும் தெரிவித்தனர். விடுதலைப் புலிகள் மறைந்து உள்ள இடங்களை கண்டுபிடித்து அவர்களுடன் மோத ராணுவத்துக்கு தைரியம் இல்லை. அதற்கு பதிலாக பொது மக்கள் மீது போர் தொடுத்து உள்ளனர். தமிழர்களின் கடைகளையும் தீவைத்து கொளுத்துகிறார்கள்.

## சித்ரவதை

தமிழ் இளைஞர்களை ...டால் போதும் ராணுவ...னர் அவர்களை பிடி...த்துச் சென்று அடி... சித்ரவதை செய்து கொ...விடுகின்றனர். தமிழ் இளை...களுக்கு விடுதலைப்புலி...டன் தொடர்பு இல்லா...டாலும் கூட அவர்களு... இந்த கதிதான்.

ராணுவத்தினரின் அட்...யங்களை தொடர்ந்துவிடு... புலிகளை விரும்பாதவர்... கூட இப்போது அவர்கள்...கம் சாய்ந்து உள்ளனர்.

## மார்க்கெட்டுக்கு தீ வை...

யாழ்ப்பாணத்திலுள்ள... பெரிய சூப்பர் மார்க்...டுக்கு ராணுவத்தினர் தீ... தனர். அதை முற்... அழித்து விட்டனர்.

இதற்கு அடுத்து பத்... ஓட்டல் ஒன்று உள்ளது... மத பக்தர்கள் இங்கு ... வார்கள். இதை விடுதலை...கள் தீ வைத்து கொளு... விட்டனர்.

## ஒத்துழைப்பு கிடையா...

யாழ்ப்பாணத்தை சே... துணி உற்பத்தியாளர் ... கையில், "நாங்கள் ...சுடன் ஒத்துழைக்க வே...டும் என்று அரசு விரு...கிறது. தமிழர்கள் ...களும், உடைமைக... தீவைத்து கொளுத்த...கின்றன. எங்கள் குழந்...களையும், நடுநிலைவாதி...யும் சுட்டுத் தள்ளுகி...கள். பின் எப்படி நாங்... அரசுடன் ஒத்துழைக்க ...யும்" என்று கூறினார்.

இவ்வாறு அந்த பத்தி... நிருபர் குறிப்பிட்டு...ளார்.





லண்டன் தமிழ் மன்றம்
LONDON TAMIL MANRAM
51 Selborne Gardens
Hendon, London, NW4 4SH
Tel: 01-202 7190


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்